# Club Officer Agreement and Release Statement | மன்ற அதிகாரி ஒப்பந்தம் மற்றும் விடுவிப்பு அறிக்கை

## வழிமுறைகள்

மன்ற அதிகாரிகள், அவர்களின் மன்றங்கள் மற்றும் நிறுவனம் ஆகிய இரு தரப்புகளின் தொடர்ந்த வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் முக்கியமானவர்கள் ஆவர். ஒரு Toastmaster-இன் பயணத்தில் அவர்களின் மன்றங்(களி)ன் மன்ற அதிகாரிகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். அனைத்து Toastmaster களும் ஒரே மாதிரியான நிலைத்தன்மையுடைய அனுபவத்தைப் பெறுவதை உறுதிப்படுத்த, அனைத்து மன்ற அதிகாரிகளும் கீழ்க்காணும் மன்ற அதிகாரி ஒப்பந்தம் மற்றும் விடுவிப்பு அறிக்கையை மதிப்பாய்ந்து, ஒப்புக்கொண்டு, கையொப்பமிடக் கோருகிறோம். நிரப்பப்பட்ட இந்தப் படிவம் மன்றச் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு மன்றப் பதிவுகளில் காலவரையின்றி தக்கவைக்கப் படவேண்டும்.

## விடுவிப்பு அறிக்கை

எனது மன்றச் செயற்குழுவின் உறுப்பினராக, *Toastmasters International இன் மன்ற அரசியலமைப்பு, மன்றத் தலைமைத்துவக் கையேடு*, மற்றும் இயக்குநர் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையான விதிகள் அல்லது கொள்கைகளில் விவரிக்கப்பட்டுள்ள, பொறுப்புகள் மற்றும் கடமைகளை நான் ஏற்றுக்கொள்கிறேன்: கூடுதலாக, அனைத்து உறுப்பினர்களும் கீழ்ப்படிந்து ஒப்புக்கொள்ள வேண்டிய கடமைகளாக உறுப்பினர்நிலை விண்ணப்பத்தில் பட்டியலிடப்பட்டுள்ள பின்வரும் கடமைகளை நான் புரிந்துகொண்டதையும் அவற்றை ஒப்புக்கொண்டதையும் மீண்டும் உறுதிப்படுத்துகிறேன். இவற்றை உள்ளிட்ட ஆனால் அவற்றோடு மட்டுமென வரையறுக்கப்படாதவை:

- "ஒரு சொல்வேந்தரின் உறுதிமொழி" இல் விவரிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க ஒப்புக் கொள்கிறேன்.
- ஒரு தனிநபராக மற்றும் Toastmasters மன்றத்தின் உறுப்பினராக எனது நடத்தைக்குத் தனிப்பட்ட முறையில் பொறுப்பு ஏற்கிறேன்.
- நான் எந்த விதமான பாகுபாடு, தொந்தரவு, கொடுமைப்படுத்துதல், இழிவான, சட்டவிரோத, அல்லது நெறிமுறையில்லாத நடத்தை ஆகியவற்றிலிருந்து விலகியிருப்பேன். அத்துடன் நான் அவ்வாறான நடத்தையில் ஈடுபட்டால், என் நடத்தை காரணமாக ஏற்படும் சேதங்கள், இழப்புகள் அல்லது செலவுகளை Toastmasters International, என்னுடைய மன்றம் அல்லது பிற மன்றங்களுக்கு அல்லது Toastmasters இல் ஈடுபட்டுள்ள பிற தனிநபர்களுக்கு திருப்பிக் கொடுக்க ஒப்புக்கொள்கிறேன்.
- Toastmasters நிகழ்ச்சிகள் தன்னார்வலர்களால் நடத்தப்படுகின்றன. அவர்களை Toastmasters International அல்லது அதன் மன்றங்களால் திறம்பட பரிசோதனை செய்யவோ அல்லது மேற்பார்வையிடவோ முடியாது என்பதைப் புரிந்துகொள்கிறேன். எனவே, எனது மன்றம் அல்லது பிற மன்றங்களின் எந்தவொரு உறுப்பினர் அல்லது அதிகாரி அல்லது Toastmasters International-இன் எந்தவொரு அதிகாரியாலும் வேண்டுமென்றே செய்யப்படும் அல்லது அலட்சியமான செயல்கள் அல்லது குறைபாடுகளுக்கான எந்தவொரு பொறுப்பிலிருந்தும் Toastmasters International, அதன் மன்றங்கள், நிர்வாகக் குழுக்கள் மற்றும் பிரதிநிதிகளை நான் விடுவித்து வெளியேற்றுகிறேன்.

நான் பின்வருவனவற்றையும் ஒப்புக்கொள்கிறேன்:

- கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம் மற்றும் ஏற்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஆதலால், நான் கையாளும் பிரச்சனையின் மீது கவனம் செலுத்துவேனே தவிர தனிநபரின் மீது அல்ல என்று வாக்குறுதியளிக்கிறேன்.
- மன்றத்தின் நிதிகளுக்குப் பொறுப்பேற்கிறேன் மேலும் மன்றத்தின் நிதிகள் தொடர்பான Toastmasters International இன் நெறியாளும் ஆவணங்கள் மற்றும் உள்ளூர் நீதிபரிபாலன வரம்புகளைப் பேணுவதில் இணக்கமாக நடப்பேன்.
- தனிப்பட்ட உறுப்பினர்கள், மன்றங்கள் மற்றும் மாவட்டங்கள் Toastmasters சின்னம் மற்றும் சொல்குறி ஆகியவற்றை மாற்றவோ அல்லது சேர்க்கவோ தங்கள் சொந்த சின்னத்தை உருவாக்கவோ பயன்படுத்தவோ கூடாது என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.
- எல்லா நிகழ்ச்சிகளும், பொருட்களும், உள்ளடக்கங்களும் Toastmasters International-இன் சொத்து என்பதையும் எந்தவொரு தனிநபருக்கும், அவர்களின் துணை நிறுவனங்கள் மற்றும் / அல்லது அமைப்புகளுக்கும் எந்தவொரு நிதி ஆதாயத்தையும் பெற அவற்றைப் பயன்படுத்த முடியாது என்பதையும் நான் புரிந்துகொள்கிறேன்.
- ஒரு மன்ற உறுப்பினராக அல்லது மன்ற அதிகாரியாக இருப்பது தொடர்பான அனைத்துத் தகவல்களையும் Toastmasters International உலகத் தலைமையகத்திலிருந்து பெறுவதற்கு ஒப்புக்கொள்கிறேன்.

இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதன் மூலம், *Toastmasters International இன் மன்றங்களுக்கான மன்ற அரசியலமைப்பு* மற்றும் *மன்ற தலைமைத்துவக் கையேடு* உள்ளிட்ட ஆனால் அதோடு மட்டுமென வரையறுக்கப்படாத பிற ஆதரவு ஆவணங்களில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகளை ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்கிறேன்.

## Confirmation | உறுதிப்பாடு

I have read and agree to the terms and conditions of the Club Officer Agreement and Release Statement. |
மன்ற அதிகாரி ஒப்பந்தம் மற்றும் விடுவிப்பு அறிக்கையின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் படித்து ஒப்புக்கொள்கிறேன்.

Full Name | முழுப் பெயர்

Member Number | உறுப்பினர் எண்

Officer Position | அதிகாரிப் பதவி

Club Name | மன்றப் பெயர் Club Number | மன்ற எண்

Signature | கையொப்பம் Date (MM/DD/YYYY) | தேதி *(மாமா/நாநா/வவவவ)*

© 2020 Toastmasters International. எல்லா உரிமைகளும் காக்கப்பட்டுள்ளன Toastmasters International, Toastmasters International இலட்சினை, Toastmasters International வணிகச்சின்னங்கள் மற்றும் பதிப்புரிமைகள் Toastmasters International நிறுவனத்தின் தனி உடைமை ஆகும். இவற்றை அனுமதியுடன் மட்டுமே பயன்படுத்தலாம்.
உருப்படி ta-IN498 Rev. 04/2022